“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 12

## புலன்மொழித்தேர்வு

**கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்**

சுட்டெண் : ______________________

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரைப்பகுதியையும், நேர்காணலையும் கேட்டு, விளங்கிக்கொண்டு, கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

## ‘அ’ பகுதி

**01. கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ‘சரி’ எனவும் பிழையாயின் ‘பிழை’ எனவும் பெட்டியினுள் அடையாளமிடுங்கள்.**

| | சரி | பிழை |
|---|---|---|
| 1. வையக மொழிகளுள் தமிழ்மொழியின் மொழியமைப்பு சிறந்ததாக உள்ளது. | | |
| 2. செம்மொழிச் சிறப்பைப்பெறும் தகைமைகளுள் மொழியின் தொன்மையும் ஒன்றாகும். | | |
| 3. 2004 ஆம் ஆண்டு தமிழ்மொழி செம்மொழிச் சிறப்பைப் பெற்றது. | | |
| 4. வையகச் செம்மொழிகளின் எண்ணிக்கை ஏழு ஆகும். | | |
| 5. பழையகால இலக்கியங்களுடன் புதியகால இலக்கியங்களையும் கொண்டுள்ள மொழிகளுள் சீன மொழியும் ஒன்றாகும். | | |
| 6. தமிழர்கள் ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறார்கள். | | |
| 7. வையகத்தின் முதல்மொழி தமிழென மொழியியல் ஆய்வாளர்களால் நிறுவப்பெற்று வருகிறது. | | |
| 8. தமிழ்மொழியின் பெருமைகளை வையகமெங்கும் சேர்ப்பிக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும். | | |

**(8×½=4புள்ளி)**

## ‘ஆ’ பகுதி

**02. சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழுள்ள பெட்டியினுள் அடையாளமிடுங்கள்.**

1. உலக மொழிகளின் வரலாறாக விளங்கும் மொழி

| ஆங்கிலம் | தமிழ் | எபிரேயம் |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

2. தமிழ்மொழியின் தொன்மையான இலக்கண நூலாகக் கருதப்பெறுவது

| அகத்தியம் | இலக்கணவிளக்கம் | நேமிநாதம் |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

3. தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற இலக்கண நூல்களுள் ஒன்று

| நன்னூல் | குறுந்தொகை | அகத்தியம் |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

4. எட்டுத்தொகை நூல்கள் தோன்றிய காலம்

| அறநீதிநூற்காலம் | காப்பியகாலம் | சங்ககாலம் |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

5. இன்று பழந்தமிழிலக்கியங்கள் பேணப்பெறுவதற்குத் துணையாக இருப்பது

| கணினி | ஏடுகள் | கல்வெட்டுகள் |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

6. தமிழர் அல்லாதவரும் தமிழ் நூல்களைப் படிப்பதற்கான வழியாக அமைவது

| ஆங்கிலக்கல்வி | மொழிபெயர்ப்பு | அந்நியராட்சி |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

**(6×½=3புள்ளி)**

**03. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1. எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தமிழ் நூல்களுள் தொன்மையானது எது?

_______________________________________________

2. தொல்காப்பியர், வாழ்க்கையை எவ்வாறு பிரித்துள்ளார்?

_______________________________________________

3. தமிழுக்கு வளம் சேர்க்கின்றவையாகக் கூறப்பெற்றவற்றுள் இரண்டினைத் தருக.

_______________________________________________

4. தமிழில் பெருந்தொகையான வடமொழிச்சொற்கள் வந்து சேரத்தொடங்கிய காலம் எது?

_______________________________________________

5. தமிழின் தொன்மையான நூல்களைப் படித்துப் பயன்பெறும் வகையில் தமிழ்மொழியைக் கற்றுக்கொண்டிருப்பவர்கள் யார்?

_______________________________________________

6. தமிழ்மொழியில் எப்படியான இலக்கியங்கள் படைக்கப்பெற வேண்டுமென ஆய்வாளர் கூறினார்?

_______________________________________________

**(6×½=3புள்ளி)**